# கிறிஸ்துவுக்கு சாட்சிகள்

Transcribed from a message spoken in February 2015, in Chennai

By *R.S.Milton*

அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் ஆண்டவராகிய இயேசுவின் அப்போஸ்தலர்கள், அவருடைய சீடர்கள், நற்செய்தியை அறிவித்தார்கள் என்று பார்க்கிறோம். நற்செய்தியை அறிவிப்பதென்றால் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வது என்று பொருள். சாட்சி என்றால் ஓர் உண்மைக்கு நான் சான்று என்று பொருள். "இயேசுகிறிஸ்து உயிரோடு இருக்கிறார்; இயேசுகிறிஸ்து உயிர்வாழ்கிறார்; அவர் மனிதனுடைய வாழ்க்கையிலே இடைபடுகிறார்" என்பதற்கு நான் சாட்சி அல்லது "தேவன் மனித னாக வந்தார்; இவர் உண்மையிலேயே தேவன்தான்; உண்மையிலேயே இவர் மனிதன்தான்," என்பதற்கு நான் ஒரு சாட்சி. "நான் அதை என் கண்கூடாய்க் கண்டேன்; என் கைகளால் தொட்டேன்; என் காதுகளால் நான் கேட்டேன்; நாங்கள் அவரை உற்றுநோக்கிப் பார்த்திருக்கிறோம்," என்ற தேவனுடைய இருதய விருப்பம் இந்த யுகத்திலே, நாம் வாழ்கின்ற இந்தக் காலத்திலே, நிறைவேறுவதற்கு நாம் சாட்சிகள்.

### கிறிஸ்துவின் சாட்சியாக வாழ்வது பாக்கியம்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வதற்கு இயேசுகிறிஸ்து யார்? அவர் இன்னார் என்று சாட்சி பகர்வதற்கு மக்களைத் தேடுகிறார். அப்படி எல்லாரும் அவருக்கு சாட்சி பகர்வதற்கு அவர் யார் என்று சிலர் கேட்கலாம். மக்கள் அரசியல் தலைவர்களுக்கு சாட்சி பகர்கிறார்கள். திரைப்பட நடிகர்களுக்கு எவ்வளவு பேர் சாட்சி பகர்கிறார்கள் தெரியுமா? அவர்களுடைய அபிமான கதாநாயகனின் திரைப்படம் ரிலீஸ் ஆகிறதென்றால் நாடு முழுவதும் அவருக்கு சாட்சி பகர்கின்ற கூட்டத்தின் எண்ணிக்கைதான் என்னே! ரசிகர்களுக்கு எந்த இலாபமும் இல்லை. ஆனாலும் ஒரு திரைப்பட நடிகருக்கு சாட்சி பகர்வதற்கு இந்த நாட்டிலே, உலகத்திலே, கூட்டமுண்டு. ஒரு திரைப் பட நடிகரோ அல்லது அரசியல் தலைவரோ அல்லது வேறு எந்த வீரசாகசம் செய்கின்ற ஒரு மனிதனோ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுடன் ஒப்பிடத்தக்கவன் அல்ல. அவர் ஈடுயிணையற்றவர், ஒப்பில்லாதவர், தன்னிகரற்றவர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிவது நமக்குக் கொடுக்கப் படுகிற ஒரு வாய்ப்பு, ஒரு சிலாக்கியம், ஒரு பாக்கியம். சில காரியங்கள் எப்படி வேலை செய்கின்றன என்று புரிந்துகொண்டால் சிலர் மிகவும் சந்தோஷப்படுவார்கள்; அது அவர்களுக்கு மிகவும் பரவசமாக இருக்கும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்கிற நபரை நாம் புரிந்துகொள்வதும், அறிந்துகொள்வதும், அறிவிப்பதும் சுமையல்ல; அது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு பாக்கியம். இயேசுகிறிஸ்துவை அறிவதற்காக, அனுபவிப்பதற்காக ஒரு மனிதன் அழைக்கப்பட்டிருக்கிறான் என்றால் அது சுமையல்ல, அது சொல்லொணாத பாக்கியம்! நான் ஒரு பெரிய கூட்டத்திலே உட்கார்ந்திருக்கும்போது ஒருவர் என்னிடம் வந்து, "இயேசுகிறிஸ்து தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வதற்கு உன்னை அழைக்கிறார்," என்று சொன்னால் எப்படியிருக்கும்! ஒரு பிரதம மந்திரியோ அல்லது ஒரு ஜனாதிபதியோ தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வதற்கு உங்களை அழைக்கிறார் என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய பாக்கியமோ அதைவிட பலகோடி மடங்கு பெரிய பாக்கியம்! ஆகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது ஒரு சுமையல்ல.

### நம் அனுதின வாழ்க்கை

எப்படி நாம் அவருக்கு சாட்சிகளாக இருக்க முடியும்? அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கம். இயேசுகிறிஸ்து யார்? அவர் இன்னார் என்பதற்கு நாம் சாட்சிகளாக இருக்க விரும்புகிறோம். ஆனால், எப்படி நாம் சாட்சியாக இருப்பது? நாம் வாழ்கின்ற காலங்கள் இயேசுகிறிஸ்து இப்படிப் பட்டவர், இன்னார் என்பதற்கு சாட்சியாக வாழ்வதற்கு மிக வசதியான காலங்கள்போலத் தோன்றவில்லை. இன்னும் சொல்லப்போனால் நாம் வாழ்கின்ற காலங்கள் மிகவும் கொடுமையாக உள்ளது. ஆகவே, இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வது முடியாது என்பதுபோலகூடத் தோன்றும். "முதல் நூற்றாண்டில் அல்லது இரண்டாம் நூற்றாண்டில், இந்த நாட்டில் அல்லது அந்த நாட்டில் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வது சாத்தியம்; ஆனால், இந்த நூற்றாண்டில் இந்த நாட்டிலே அல்லது அந்த நாட்டிலே இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வது அல்லது நம் வாழ்க்கையின்மூலமாய் அவர் யார் என்பதைக் காண்பிப்பது கடினம்," என்று சிலர் நினைக்கலாம்.

"இயேசுகிறிஸ்து யார், எப்படிப்பட்டவர், இன்னார்" என்பதற்கு நம் வாழ்க்கை பிரதானமாக சாட்சி பகர்கிறது. நாம் பேசவும் செய்வோம். ஆனால், பேசுவது நம் வாழ்க்கையின் ஒரு பகுதிதானே தவிர, இயேசு கிறிஸ்துவுக்காகப் பேசுவதுதான் சாட்சிபகர்வது என்று நினைத்துக்கொள்ள வேண் டாம். ஏனோதானோவென்று வாழந்துவிட்டு பேசினால் போதும்; அதுதான் சாட்சி என்று தவறாக நினைக்க வேண்டாம். வாழ்க்கை எப்படியோயிருந்தால் பேசுவதால் பெரிய சாட்சி ஒன்றும் பகிர்ந்து விடப் போவது இல்லை. இயேசுகிறிஸ்து உயிர்வாழ்கிறார் என்பதற்கு நாம் சாட்சி; அவரை நேசிக் கிற, விசுவாசிக்கிற, பற்றிக்கொள்கிற, பின்பற்றுகிற ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் அவர் இடைபடுகிறார் என்பதற்கு நாம் உயிர்வாழும் சாட்சி.

### சாட்சி எங்கும், எப்போதும் சாத்தியம்

'உண்மையிலே ஒருவேளை இரண்டாம், மூன்றாம், நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தால் கொஞ் சம் எளிதாக இருந்திருக்கும். இப்போதெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வது முடியாத காரியம்," என்று உங்களுக்கு தோன்றுகிறதா? "நாம் வாழ்கிற இந்த இருபதாம் நூற்றாண்டுதான் அல்லது நாம் வாழ்கிற நாடுதான் மனித வரலாற்றில் மிகவும் கஷ்டமான காலம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இயேசுகிறிஸ்துவை அறிவிப்பதற்காக பதினெட்டாம் நூற்றாண்டில் மேலை நாட்டிலிருந்து மேற்கத்தியர்கள் நிறையப்பேர் இந்தியாவுக்கு வந்தார்கள், சீனாவுக்குப் போனார்கள், ஆப்பிரிக்காவுக்குப் போனார்கள். "அது கொஞ்சம் எளிமையான நாடு. அங்கு நற்செய்தியை அறி விப்பது, இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வது, எளிதாக இருந்தது. இந்த இருபதாம் நூற்றாண் டில் அதுபோல இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ, ஆப்பிரிக்காவுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ போய் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வது மிகக் கஷ்டம்" என்று நினைக்கிறீர்கறா? "இல்லை கஷ்ட மில்லை. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது முடியுமென்றால் இருபதாம், இருபத் தொன்றாம் நூற்றாண்டிலும் இது முடியும்," என்று நினைக்கிறீர்களா? "பத்தொன்பதாம் நூற்றாண் டிலே இயேசுவைப்பற்றி சாட்சிபகர்வது எளிமையானது. இருபத்தொன்றாம் நூற்றாண்டிலே அது எளிமையானதல்ல. மக்களெல்லாம் இப்போது நல்ல வசதிபடைத்தவர்களாக இருக்கிறார்கள். காலம் மாறிற்று. எனவே, இப்போது அது எளிமையானதல்ல என்று நினைக்கிறீர்களா?"

எல்லாக் காலத்திலும், தேசத்திலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வது கடினம் தான்; எல்லாக் காலத்திலும், தேசத்திலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வது எளிமையானதுதான். கடினமா அல்லது எளிமையானதா என்பது யாருடைய பலத்திலே இதைச் செய் கிறோம் என்பதைப் பொறுத்தது; எந்த பலத்தைச் சார்ந்திருக்கிறோம் என்பதை பொறுத்தது. எந்த தேசத்திலும், எந்தக் காலத்திலும் தேவனுடைய மக்கள் அரசியல் பலம், பொருளாதார பலம், எண் ணிக்கை பலம், தங்களுடைய அறிவின் பலம் ஆகியவைகளை நம்பி வாழ்ந்திருந்தால் அது எப் போதுமே மிகக் கடினமானதுதான். பரிசுத்த ஆவியை சார்ந்திருந்தால் எல்லாக் காலத்திலும், எல்லா நாடுகளிலும் அது எளிமையானதுதான். 21ஆம் நூற்றாண்டில் நமக்கு அரசியல் செல்வாக்கோ, பொருளாதார செல்வாக்கோ, எண்ணிக்கை செல்வாக்கோ, நம் அறிவின் செல்வாக்கோ நம்மிடத்தில் இல்லை.

இந்த உலகத்தை கடவுள் படைத்தார் என்று அமெரிக்காவில் அரசு பள்ளிகளில் சொல்லிக்கொடுக்க முடியாது. கடவுள் என்ற வார்த்தையை விடுங்கள்; சிந்திக்கிற ஒரு நபர் இந்த உலகத்தை உண்டாக் கினார் என்றுகூட அமெரிக்காவில் அமெரிக்க அரசாங்கம் பணம் போட்டு நடத்துகிற பள்ளிக்கூடத் திலே சொல்லிக்கொடுக்க முடியாது. அவ்வளவு கஷ்டமான, கொடுமையான காலங்களிலே நாம் வாழ்கிறோம். இந்தியாவைப்பற்றி கேட்கவே வேண்டாம். பிளாஸ்டிக்கே கண்டுபிடிக்காத நாட்களிலே ஆறாயிரம் வருஷத்துக்கு முன்பு பிளாஸ்டிக் சர்ஜரி எல்லாம் பண்ணி தேறினவர்கள்.

### பரிசுத்த ஆவியின் வல்லமையால் சாட்சிபகர்தல்

ஆகவே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வது இந்த உலகத்துக்குரிய, பூமிக்குரிய, இயற்கையான பலத்தையோ, திறமையையோ வைத்தல்ல. ஒரு காலத்திலும் தேவனுடைய மக்கள் இந்த உலகத்திற்குரிய, பூமிக்குரிய, இயற்கையான வளமும், வளங்களும், செல்வாக்கும் உடையவர் களாக வாழ்ந்ததில்லை. "ஓநாய்களுக்குள்ளே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன்," என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம் சீடர்களுக்கு சொன்னார். முதல் நூற் றாண்டிலும் தேவனுடைய மக்கள் ஓநாய்களுக்குள்ளே ஆடுகளைப்போல்தான் வாழ்ந்தார்கள்; 21ஆம் நூற்றாண்டிலும் நாம் ஓநாய்களுக்குள்ளே ஆடுகளைப்போல்தான் வாழ்கிறோம். இந்த எல்லா ஓநாய் களுக்கு நடுவிலே ஆடுகளைப்போல் தேவனுடைய மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது பெரிய ஆச்சரியம்! "தேவனுடைய மக்கள் அழிந்துபோவார்கள்; மடிந்துபோவார்கள்," என்று

இந்த உலகம் நினைக்கலாம். நாம் பயப்படலாம்; ஆனால், நாம் அழிந்து போவதோ மடிந்து போவதோ இல்லை.

ஓர் இரகசியத்தை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தேவனுடைய மக்களுடைய சாட்சியை ஒழிப்பதற்கு வெளியிலிருந்து வருகின்ற எந்த சக்தியாலும் முடியாது. அது அரசியல் சக்தியாக இருந்தாலும் சரி, பொருளாதார சக்தியாக இருந்தாலும் சரி, அல்லது அறிவு சக்தியாக இருந்தாலும் சரி, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சாட்சியை அழிக்க முடியாது. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சாட்சியை அழிக்க ஒன்றே ஒன்றால் முடியும். **தேவனுடைய மக்களால்** முடியும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சாட்சி அழிந்துபோகிறது என்றால் அதற்கு வெளியே இருந்து வருகிற எந்த சக்திகளும் காரணமல்ல. உள்ளே இருக்கிற தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை காரணமாக இருக்கும். தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை தேவன் விரும்புகிற வண் ணம் இருக்குமென்றால் வெளியே இருந்து எந்த சக்தியும், வல்லமையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சியை நம் வாழ்க்கையிலே அழிக்க முடியாது.

ஏசாயாவிலே ஒரு வசனம் உண்டு. "யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப் படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன். இதோ போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்திரமாக்குகிறேன். நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதறுக்கு ஒப்பாக்கிவிடுவாய்" (ஏசாயா 44:14, 15). நாம் யார்? இந்த உலகத்தின் பார்வையிலே தேவனுடைய மக்கள் யார்? பூச்சிகள். ஒரு பூச்சி மலைகளை உடைக்க முடியுமா? பெரிய இயந் திரங்கள் மலைகளை உடைக்கலாம். ஆனால் "யாக்கோபு என்னும் பூச்சியே உன்னை மலைகளை உடைக்கிற இயந்திரமாக்குவேன்," என்று தேவன் வாக்குறுதி அளிக்கிறார்.. ஒரு பூச்சிக்கு அப்படிப் பட்ட சக்தியும், வல்லமையும் எங்கிருந்து வரும். அது இந்த உலகத்திற்குரியதோ, பூமிக்குரியதோ, இயற்கையானதோ அல்ல. இந்த பூமி, உலகம், இயற்கையான மனிதன் அறியாத ஒரு வல்லமை தேவனுடைய மக்களிடத்தில் உண்டு. அதற்கு புதிய ஏற்பாடு அல்லது முழு வேதாகமம் கொடுக்கிற எளிமையான பெயர் **ஆவியின் வல்லமை**. சகரியாவிலே இந்த வாக்கியம் உண்டு. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும்".

எந்த நாட்டிலும், காலத்திலும், நிலையிலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உயிர்த்துடிப்புள்ள, வீரியமுள்ள ஒரு சாட்சியை விளங்கச்செய்வதற்கு தேவனுடைய மக்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்று நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

முதலாவது தேவனுடைய மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தங்களுடைய தனிப் பட்ட உறவை பராமரிந்துக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவை personal relationship with the Lord Jesus Christ. இதை தேவனுடைய மக்களாகிய நாம் பரா மரித்துக்கொள்ள வேண்டும். இதை நாம் ஒரு புதையலைப்போல, பொக்கிஷத்தைப்போல, கருதி பராமரிக்க வேண்டும். இரண்டாவது, தேவனுடைய மக்களாகிய நாம் இந்த உலகத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டவர்கள்; நாம் இந்த உலகத்திற்குரியவர்களல்ல; உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்ட வர்கள். நாம் இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்து நாம் இந்த உலகத்திற்கு சாட்சிபகர்கிறோம். உலகத் தோடு ஒட்டி உறவாடி இந்த உலகத்துக்கு சாட்சி பகர்வது இல்லை. மூன்றாவது, தேவனுடைய மக்கள் தூய உள்ளமுள்ள, தூய இருதயமுள்ள பிற தேவனுடைய மக்களோடு தோழமை கொண்டு வாழ வேண்டும்.

### 1. மதமுறைமை அல்ல, இயேசுவோடு தனிப்பட்ட உறவு

இந்த மூன்று காரியங்களை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். முதலாவது ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவு. இரண்டாவது உலகத்தைவிட்டு நாம் பிரிக்கப் பட்டவர்கள். மூன்றாவது தூய உள்ளமுள்ள, தூய இருதயமுள்ள தேவனுடைய மக்கள் பிறரோடு தோழமை அல்லது ஐக்கியம். இயேசுகிறிஸ்துவைக் காண்பிக்கின்ற உயிர்த்துடிப்புள்ள வீரியமுள்ள வாழ்க்கைக்கு இது அவசியம். மீண்டும் சொல்கிறேன் என் வாழ்க்கையிலே அல்லது நம் வாழ்க்கை யிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெளியாகிறார் என்பதைப்போல ஓர் அற்புதம், ஓர் ஆச்சரி யம், ஒரு மகிமை மனித வாழ்க்கையிலே வேறொன்றும் இல்லை. உங்கள் வாழ்க்கையின் முடிவிலே எதை மகிமையான கட்டமாக நீங்கள் நினைப்பீர்கள். கல்லூரியில் பட்டம்பெற்றதை மகிமையான கட்டமாக நீங்கள் நினைப்பீர்களா? அல்லது ஒருநாளில் டாக்டர் பட்டம் பெற்றதை நீங்கள் வாழ்க்கை யின் மகிமையான கட்டமாக நினைப்பீர்களா? அல்லது கல்யாணம் பண்ணின நாளை உங்கள் வாழ்க்கையின் மகிமையான கட்டமாக நீங்கள் நினைப்பீர்களா? அல்லது என்றைக்கு நீங்கள் புதிய வீடு கட்டி வீட்டிற்குள் குடிபுகுந்தீர்களோ அதை மகிமையான கட்டமாக நினைப்பீர்களா? அல்லது

என்றைக்கு நீங்கள் புது கார் வாங்கினீர்களோ அந்த நாளை உங்கள் வாழ்க்கையில் மகிமையான நாளாய்க் கருதுவீர்களா? சிறிதளவேனும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என் வாழ்க்கையின்மூல மாக வெளியாகின்ற ஒரு நாள்! அங்கு வெளியாகியிருக்கிறார் என்றால் அதைப்போன்ற மகிமை, அற்புதம், ஆச்சரியம் வேறு ஒன்றும் இல்லை. என் வாழ்க்கையில் வெளிப்படுகிற இயேசுகிறிஸ் துவை ஒருவர் கண்டு அல்லது ஒருசிலர் கண்டு அவர்கள் இயேசுகிறிஸ்துவின் பக்கமாய் ஈர்க்கப் பட்டார்கள்; அவர்கள் வாழ்க்கை மாறினது என்பதைப்போன்ற மகிமை இன்றும் இல்லை, என்றும் இருக்கப்போவதும் இல்லை. நீங்கள் இதை நம்புங்கள். சில காரியங்கள் அந்த சமயத்திற்கு, அந்தப் பொழுதிற்கு மகிமையானதுபோல் தோன்றும். ஒருநாள் அவைகள் வற்றிப்போகும், காய்ந்துபோகும்.

முதலாவது, இயேசுகிறிஸ்துவைப் பற்றுகிற, பின்பற்றுகிற வாழ்க்கை என்பது ஒரு மதமுறைமை யைப் பின்பற்றுகிற வாழ்க்கை அல்ல. அது பழைய ஏற்பாட்டு மதமுறைமையாய் இருந்தாலும் சரி, புதிய ஏற்பாட்டு மதமுறைமையாய் இருந்தாலும் சரி, ஒன்றைக் கவனிக்க வேண்டும். பழைய ஏற்பாட் டிலே பழைய முறைமை இருந்தது. முறைமை என்றால் organization அல்லது order. The religious order அல்லது religious system இருந்தது. புதிய ஏற்பாட்டிலே மதமுறைமை இல்லை என்று தேவ னுடைய மக்கள் தங்களைக் குருடாக்கிக்கொள்கிறார்கள். எந்த அளவுக்குப் பழைய ஏற்பாட்டிலே மதமுறைமைகளை வைத்திருந்தார்களோ, அந்த அளவுக்குப் புதிய ஏற்பாட்டிலே மதமுறைமைகளை வைத்திருக்கிறார்கள்.

ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். ஒரு கல்லூரி விடுதியில் இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள். ஒருவர் விசுவாசி. போன வாரம் அந்தச் சகோதரன் தன் நண்பனை நம் கூட்டத்துக்கு அழைத்து வந்திருந்தார். சகோதரன் தான் சர்ச்சுக்குப் போவதாகச் சொன்னாராம். உடனே அவருடைய நண்ப ரும் “சரி, நானும் வருகிறேன்” என்று சொன்னாராம். “சரி வா” என்று கூட்டிக்கொண்டு வந்தார். அவர்கள் இங்கே வந்தார்கள். கூட்டம் முடிந்தபிறகு அவருடைய நண்பர் சகோதரனைப் பார்த்து ஒரு கேள்விக்கணை தொடுத்திருக்கிறார். “ஏண்டா சர்ச்சுக்குக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்லிவிட்டு இங்கே நீ ஒரு வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாயே?” என்று கேட்டாராம். உடனே சகோ தரன், “இல்லடா, சர்ச்சுக்குத்தானே நான் உன்னை கூட்டிட்டுப் போனேன்,” என்று சொன்னாராம். அதற்கு அவருடைய நண்பன், “யாரடா ஏமாற்றுகிறாய்? எனக்கு சர்ச் என்றால் என்னவென்று தெரி யாதா?” என்று மறுமொழி கொடுத்தாராம்.

### கிறிஸ்து என்னில் வாழ்கிறார்

புதிய ஏற்பாட்டில் இதற்குப் பெயர்தான் தேவனுடைய மக்களிடையே காணப்படுகின்ற மதமுறைமை, மதஅமைப்புமுறை. “கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல; கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமா ரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்”, என்று பவுல் கூறுகிறார் (கலா. 2:20). *பிழைத்திருக்கிறேன்* என்பது பழைய தமிழ். *வாழ்கிறேன்* என்பது நேர்த்தியான தமிழ். *வாழ்வது இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்.* இது பிரபலமான ஒரு வசனம். “நான் இப்பொழுது வாழ் வதோ தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ்கிறேன்,” என்று பவுல் சொல்லி முடித்துவிடலாம். ஆனால் “தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ்கிறேன்,” என்று சொல்லி முடித்துவிடவில்லை. அந்தத் தேவனுடைய குமாரன் யார் என்று சொல்கிறார். அவர் “என் மேல் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன். நான் அவ ருடைய விசுவாசத்தினால் வாழ்கிறேன்,” என்று சொல்கிறார். பவுல் ஏன் அப்படிச் சொல்ல வேண் டும்?

வேதத்தை வாசிக்கும்போது சில சமயங்களில் நீங்கள் இப்படி யோசித்துப் பார்க்க வேண்டும். “நான் இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ்கிறேன்,” என்று சொல்லாமல் “தேவனுடைய குமாரன்” என்று ஏன் சொல்கிறார்? சரி. “தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத் தினால் வாழ்கிறேன்,” என்று சொல்லாமல் “என்மேல் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப் புக்கொடுத்த” என்று சொல்கிறார். தேவன் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்பது காரியமல்ல. தேவன் யார்மேல் அன்புகூர்ந்தார்? தேவன் பவுலாகிய என்மேல் அன்புகூர்ந்து எனக்காக அவரை ஒப்புக் கொடுத்தார். தேவன் என்மேல் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். ஆகவே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவது என்றால் ஒரு மதமுறைமையைப் பின்பற்றுவது அல்லது மதசட்டதிட்டங்களைப் பின்பற்றுவது என்று பொருள் அல்ல.

### தேவ மக்களுக்கிடையேயுள்ள உறவு-சபை

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பது அல்லது கிறிஸ்தவனாய் இருப்பதின் பொருள் "ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு முன்பு எனக்கு உறவு இல்லை. இப்பொழுது எனக்கு ஒரு உறவு உண்டு; தனிப்பட்ட உறவு உண்டு". "அவர்ஆயிரம்பேரை நேசித்தார். அந்த ஆயிரம்பேரில் நானும் ஒருவன்," என்று சிலபேர் சொல்வார்கள். அவர் "சபையில் அன்புகூர்ந்து சபைக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்," என்று எபேசியரிலே எழுதியிருக்கிறது. அவர் "சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினாலே சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்," என்றும் வேதத்தில் இருக்கிறது. ஆனால், அவர் "சபையில் அன்புகூர்ந்தார்" என்று சொல்லும்போது நான் ஒரு non entity ஆக மாறிவிடுவேன். சபை என்பது ஒரு abstract entity. அதில் நாமெல்லாம் ஒரு முகம் தெரியாத ஆட்களாய் இருக்கிறோம்.

அந்த நண்பனைப்போல சபையைப்பற்றி சிலர் கற்பனை செய்து வைத்திருக்கிறார்கள். இன்னொரு சகோதரன் இருக்கிறார். அவருடைய கூற்று என்னவென்றால், "நான் உங்களைச் சந்திக்க விரும்பு கிறேன். ஆனால் உங்கள் கூட்டத்துக்கு வர மாட்டேன்; சர்சுக்கு வரமாட்டேன்". நம் சந்திப்பும், உற வும், ஐக்கியமும்தான் சபை. ஞாயிற்றுக்கிழமை காலை *10* மணியிலிருந்து *12* மணிவரை இருந்து பிறகு சேர்ந்து சாப்பிட்டு முடித்தால்தான் சபை என்பதல்ல. நின்று பேசினால்தான் அது சபையல்ல. உட்கார்ந்து பேசினலும் சபைதான். நின்று பேசினாலும் சபைதான்; உட்கார்ந்து பேசினலும் சபை தான். நாம் முப்பது பேராய் இருந்து பேசினாலும் சபைதான்; மூன்று பேராய் இருந்து பேசினாலும் சபைதான். நாம் ஞாயிற்றுக்கிழமை சாப்பிட்டாலும் அது சபைதான். ஒருவேளை சகோதரன் சனிக் கிழமை வந்து சாப்பிட்டாலும் அது சபைதான். சபையைப்பற்றிய கோட்பாடு, கருத்து நம் இருதயத் தில் எப்படி மூடியிருக்கிறது! *சபை என்பது தேவனுடைய மக்களுக்கிடையே உள்ள ஆவிக்குரிய உறவு. சபை என்பது தேவனுடைய மக்களுக்கு இடையே உள்ள ஆவிக்குரிய உறவு அல்லது உறவுபடுத்தப்பட்ட நிலை.* உறவுகள்கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் உறவுப்படுத்தப்பட்ட நிலையிலே எந்த மாற்றமும் இல்லை. ஒருவேளை ஒருவர் வேறொரு நாட்டிற்கு செல்லலாம். அப் புறம் பத்து வருடத்திற்கு ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் உறவும் நட்புறவும் வைக் கிற நிலைமையிலே நாம் இருக்க மாட்டோம். ஆனால் ஒரு உறவுப்படுத்தப்பட்ட நிலை நமக்கு இருக்கிறதா? இருக்கிறது. ஒரு சூழ்நிலை அல்லது தேவை என்று வரும்போது நாம் ஒருவருக்கொரு வர் கிறிஸ்துவுக்குள் நம் வளங்களைப் பரிமாறிக்கொள்வோம். அது ஜெபமாக இருக்கலாம் அல்லது தேவனுடைய வார்த்தையாக இருக்கலாம் அல்லது பொருளுதவியாக இருக்கலாம் அல்லது என்ன வாகவும் இருக்கலாம்.

திருவனந்தபுரத்திலிருந்த மூன்று சகோதர சகோதரிகள் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். நேற்று இங்கு தங்கியிருந்தார்கள். இன்று காலையிலே புறப்பட்டு போனார்கள். அவர்கள் எந்த சபையை சேர்ந்தவர்கள்; அதைப்பற்றி நான் கேட்கவில்லை. நாம் தேவனுடைய மக்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுடைய மக்கள் எல்லாரோடும் ஆவிக்குரிய விதத்திலே நாம் உறவு படுத்தப்பட்டிருக்கிறோம். நாம் ஒரு டம்ளர் தண்ணீரை தேவனுடைய மக்கள் என்ற முறையிலே பரிமாறிக்கொண்டால் அங்கு சபையானது கட்டியெழுப்பப்படுகின்றது. ஒருவன் சீடன் என்கிற நாமத் தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் அவன் அதற்குரிய பலனை அடையாமற் போகான் என்றால் அதன் பொருள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் என்னுடைய சகோதர சகோதரிகள் என்ற முறையிலே எதை அவர்களுக்குச் செய்தாலும் நாம் சபையாகக் கட்டியெழுப்பப்படுகிறோம். நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். சபை என்றால் என்னவென்று தேவன் நம் மனக்கண் களைத் திறந்தருள்வாராக.

### அன்பிற்கு மறுமொழி-இயேசுவோடுள்ள தனிப்பட்ட உறவு

ஆகவே, சபையின்மேல் அன்புகூர்ந்தார் என்பது ஒரு காரியம். அவர் என்மேல் தனிப்பட்ட விதத்தில் அன்புகூர்ந்தார் என்பது இன்னொரு காரியம். உறவு என்பது நான் தேவன்மேல் கொண்ட அன்பிலே ஆரம்பிக்கவில்லை. தேவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவு எங்கு ஆரம்பித்தது? ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து நம்மேல் கொண்ட அன்பிலே ஆரம்பித்தது. எதற்காக அவர் நம்மேல் அன்பு கூர்ந்தார் என்பதற்கு எந்தக் காரண காரியங்களுமே இல்லை. "என்மேல் அன்புகூர்வதற்கு நீர் எதைக் கண்டீர்?" என்று அவரிடத்தில் கேட்டால் "நான் எதையும் காணவில்லை" என்று சொல்வார். அவ ருடைய அன்பிற்கு எந்த ஆதாரமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை நாம் ஆராய்ச்சி

செய்ய வேண்டாம். தேவன் என்னிடத்தில் எதைக் கண்டு என்னிடத்தில் அன்கூர்ந்தார்? எதிர்காலத்தில் நான் அவருக்கு நிறைய காணிக்கை கொடுப்பேன் என்பதற்காகாவா? நான் பெரிய பேச்சாளனாக இருப்பேன் என்பதற்காகவா? அவருக்கு நான் என் வீட்டைக் கொடுப்பேன் என்ற எதிர்பார்ப்போடு அவர் என்மேல் அன்புகூர்ந்தாரா? எந்த அடிப்படையிலும் தேவன் நம்மேல் அன்புகூரவில்லை. இன்னும் சொல்லப்போனால் நாம் மிகவும் சிறியவர்கள் என்பதால் அவர் நம்மேல் அன்புகூர்ந்தார். இந்த உலகத்தின் பார்வையிலே புழுக்கள், பூச்சிகள், என்பதால் தேவன் நம்மேல் அன்புகூர்ந்தார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மேல் கொண்ட அன்பிற்கு நம் இருதயத்தின் பிரதியுத்தரம் என்ன? தேவன் இந்த உலகத்திலுள்ள எல்லா மனிதர்கள்மேலும் பேர்பேராய் அன்புகூர்கிறார். ஆனால், ஒருசிலரே அந்த அன்பிற்குப் பதில் கொடுப்பவர்கள். அவருடைய அன்பைத் தள்ளுகிறவர்கள் கோடான கோடிபேர். ஆனால் அவருடைய அன்பிற்குப் பதில் அளிப்பவர்கள் ஒரு சில ஆயிரங்கள். அதில் நாம் அடங்குவோம். நானும் ஒருநாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்மேல் கொண்ட அன்பிற்குப் பதிலளித்தேன். என்ன பதில்? அவர்மேல் நான் அன்புகூர்ந்தேன். அதைப்போல் நாம் ஒவ்வொருவரும் “அவர் என்மேல் அன்புகூர்ந்தார். அதற்குப் பதிலாக நான் அவர்மேல் அன்புகூர்ந்தேன்,” என்பதுதான் நம் மறுமொழி. இதைத்தான் நாம் இரட்சிப்பு என்று சொல்கிறோம். இதைத்தான் *ஒருவனுக்கு இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவு* என்று சொல்கிறோம். இதைத் தான் *ஒருவன் கிறிஸ்தவன்* என்று சொல்கிறோம். இதைத்தான் *ஒருவன் மறுபடியும் பிறந்திருக் கிறான்* என்று சொல்கிறோம். இதைத்தான் *ஒருவன் மனந்திரும்பியிருக்கிறான்* என்று சொல்கிறோம். “ஒருவர் எனக்காகத் தன் உயிரைக் கொடுக்கும் அளவுக்கு என்மேல் அன்புகூர்ந்திருக்கிறார்; ஆனால் அந்த நபரைப்பற்றி எனக்கு எந்த அக்கறையும், கவலையும் இல்லை. என் மனம் மிகவும் கல்லான மனம். ஓர் அழிவிலிருந்து என்னை மீட்பதற்காக எனக்காகத் தன் உயிரைக் கொடுத்து என்மேல் அன்புகூர்ந்திருக்கிறார். அதைப்பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை,” என்பது மனந்திரும்பாத மனம்.

நான் மனந்திரும்பும்போது அந்த அன்புக்குப் பதிலளிக்கிறேன். “நல்லவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் எப்படி உடை உடுத்த வேண்டும். எப்படி உடை உடுத்தக்கூடாது. எப்படி உட்கார வேண் டும்; எப்படி உட்காரக்கூடாது, என்ன பேச வேண்டும், என்ன பேசக்கூடாது, எப்படி நின்று பேச வேண்டும், எப்படி நின்று பேசக்கூடாது, எவ்வளவு நேரம் பேச வேண்டும், எவ்வளவு நேரம் பேசக் கூடாது, நீங்கள் எந்த வேலைக்குப் போக வேண்டும், எந்த வேலைக்குப் போகக்கூடாது, நீங்கள் பி.இ. படிக்கவேண்டுமா அல்லது எம்.இ. படிக்கவேண்டுமா? இந்தக் கல்லூரியில் படிக்கவேண்டுமா? அந்தக் கல்லூரியில் படிக்கவேண்டுமா? இந்த நாட்டில் படிக்கவேண்டுமா? அந்த நாட்டில் படிக்க வேண்டுமா?” இதற்கெல்லாம் தேவனுடைய வார்த்தையில் சட்டம் கிடையாது. தேவனுடைய வார்த்தையிலே கோட்பாடுகள் உண்டு. அவர் நம்மை அரசாளுகிற ஒரே ஒரு சட்டம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு நமக்குள்ள உறவு. அந்த உறவில் ஒரு நெருடலை, புண்ணை, காயத்தை உண்டாக்குகிற எதையும் தேவன் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கக் கூடாது. நியாயப்பிரமாண மும் தீர்க்கதரிசனங்களும் இதில் அடங்கியிருக்கிறது.

சிகரெட் குடிக்கக்கூடாது என்றோ, திராட்சைரசம் குடிக்கக்கூடாது என்றோ, பீர் குடிக்கக்கூடாது என்றோ வேதாகமத்தில் எங்கே எழுதியிருக்கிறது? மோசே என்ன கட்டளையா கொடுத்தார். “பீர் குடிக்காதிருப்பாயாக,” அல்லது குடித்தால் என்ன சதவிகிதம் போதைவஸ்து இருந்தால் அது ஒரு கிறிஸ்தவனுக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது, எவ்வளவு தாண்டினால் அது ஒரு கிறிஸ்தவனுக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது இல்லை” என்பதைப்பற்றியெல்லாம் மோசேயும் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் எழுதி வைத்திருக்கிறதா? நம்மை அரசாளுகிற அளவுகோல், பிரமாணம், சட்ட திட்டம் எது? நம்மை அரசாளுகிற சட்டம், பிரமாணம், விதி எது? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவு. எல்லா உறவையும்விட இந்த உறவை நான் அருமையாய்க் கருதுகிறேன்; என்ன காரணத்திற்காகவும் நான் இந்த உறவை இழக்க விரும்பவில்லை என்றால் நான் பேசுகிற ஒன்று அல்லது பேசாத ஒன்று, நான் செய்த ஒன்று அல்லது செய்யாத ஒன்று அல்லது நான் உடுத்துகிற விதம் அல்லது உடுத்தாத விதம் ஆகியவைகள் முக்கியம் அந்த உறவு முக்கியம் என்றால் அவருடைய எண்ணங்கள், உணர்வுகள் முக்கியம். “ஆ! இந்த உறவு எனக்கு மிக அருமையானது. இந்தத் தொனியிலே இருக்கிற வாட்டத்தை அல்லது இந்த முகத்திலே இருக் கிற வாட்டத்தை நான் கண்டுகொண்டேன். நான் என்னை சரிசெய்து கொள்கிறேன்”.

ஒரு பெரிய அரசியலமைப்புச் சட்டம் அல்லது குற்றவியல் சட்டம் அல்லது இப்படி எழுதப்பட்ட எந்த சட்டத்தையும்விட ஒரு நபரோடு இருக்கின்ற உறவு நம்மை அந்த அளவுக்கு சரிசெய்துவிடுமா? நம் அரசியலமைப்புச் சட்டம் அல்லது மோசேயின் சட்டங்கள் அல்லது ஒரு மதஅமைப்பு முறையி

னுடைய புத்தகங்கள்-இவை நம்மை அதிகமாய் மறுசாயலாக்குமா? அல்லது இயேசுகிறிஸ்து என்ற நபரோடுள்ள தனிப்பட்ட உறவு நம்மை அந்த அளவுக்கு மறுசாயலாக்குமா? நீங்கள் இதை நம்பு கிறீர்களா? இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பபட்ட உறவு எந்த நியாயப்பிரமாணத்தைவிட பலமடங்கு மேலானது என்று புதிய ஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. நான் இதை விசுவாசிக்கிறேன். நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்கள்.

நேற்று ஒரு சகோதரி தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு சில கேள்விகள் கேட்டார்கள் “மேல் படிப்புப் படிக்க வேண்டுமா வேண்டாமா? நீங்கள் எனக்குச் சொல்லவில்லையென்றால் தலையே வெடித்துவிடும்போல் இருக்கிறது” என்பதுதான் அவர்களுடைய கேள்வி. “உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள். எனக்கு ஏதாவது கருத்து வரும்போது நான் உங்க ளோடு பகிர்ந்துகொள்கிறேன்,” என்று நான் அவர்களுக்குப் பதில் சொன்னேன். “நான் இவரைக் கல்யாணம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். இது கர்த்தருடைய சித்தமா? இல்லையா?” என்று யாராவது கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? “அப்படியா? கொஞ்சம் இருங்கள். அறைக் குள்போய் ஒரு ஐந்து நிமிடம் ஒரு மை போட்டு பார்த்து மையிலே ஆ! இவளும் இவனும் காட்சி யளிக்கிறார்கள். இது கர்த்தருடைய சித்தம். அல்லேலூயா!” என்று நீங்கள் நினைத்து வந்தீர்களென் றால் ஏமாந்து போவீர்கள். அது என் வேலையில்லை. கோட்பாடுகளைச் சொல்வது நம் பொறுப்பு. “நீ என்ன படிக்க வேண்டும்? யாரைக் கல்யாணம் பண்ண வேண்டும்? யாரைக் கல்யாணம் பண்ணக் கூடாது?” என்பது நம் பொறுப்பு அல்ல. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உற வுக்கு அது ஊறு விளைவிக்கிறதென்றால் கோடி ரூபாயாக இருந்தாலும் அதை விட்டுவிடு. ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்துவோடு அது தனிப்பட்ட உறவில் கட்டியெழுப்புகிறதென்றால் அதைப்போல் அருமையானது வேறொன்றும் இல்லை. “அது சரியா, தவறா? நன்மையா, தீமையா? நம் வாழ்க்கையை அழிக்கப்போகிறதா, கட்டியெழுப்பப்போகிறதா?” என்பதைத் தீர்மானிப்பது ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்துவோடு எனக்குள்ள உறவை அது என்ன செய்கிறது, எப்படிப் பாதிக்கிறது என்பதைப் பொறுத்தது.

### ஏனோக்கின் சாட்சி

ஆதியாகமம் 5:24இல் ஏனோக்கைப்பற்றி, “ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; பிறகு அவன் காணப்படாமற்போனான். ஏனென்றால் தேவன் அவனை எடுத்துக்கொண்டார்,” என்று எழுதியிருக்கிறது. சஞ்சரித்தானென்றால் தேவனோடு நடந்தான் என்று பொருள். பிறகு அவன் காணப் படாமற்போனான். எந்த அளவுக்கு அவன் தேவனோடுள்ள தனிப்பட்ட உறவிலே மிகவும் ஒன்றித்து விட்டானென்றால் நகைச்சுவையாக இப்படிச் சொல்வார்கள். தேவனும் ஏனோக்கும் நடந்துபோய்க் கொண்டிருக்கும்போது தேவன் ஏனோக்கைப் பார்த்து, “உன் வீட்டைவிட என் வீடுதான் பக்கத்தில் இருக்கிறது. என் வீட்டுக்குப் போய்விடலாமா?” என்று சொன்னதற்கு “போய்விடலாம் ஆண்டவரே,” என்று அவன் சொன்னானாம். ஏனோக்கு அவன் மனைவியிடம் விடைபெற்றுச் செல்லவில்லை. அதற் காக நாம் வீட்டை விட்டுப் போகும்போது விடைபெற்றுச் செல்லக்கூடாது என்று நான் சொல்ல வில்லை.தேவனோடு அவனுக்குள்ள உறவு அந்த அளவுக்கு அருமையானது. “விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே அவன் காணப்படாமற்போனான். அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்” (எபி. 11:5) என்று எழுதியிருக்கிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள உறவில் “அவன் எனக்குப் பிரியமானவன்” என்று அவர் என்னைப்பற்றிச் சொல்ல வேண்டும். காலையில் எத்தனை மணிக்கு எழும்ப வேண்டும், தூங்க வேண்டும், வேதாகமத்தில் எத்தனை அதிகாரம் வாசிக்க வேண்டும், எவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டும், உட்கார்ந்து ஜெபிக்க வேண்டுமா, முழங்கால்படியிட்டு ஜெபிக்க வேண்டுமா, எழுந்து நின்று ஜெபிக்க வேண்டுமா, படுக்கையிலே ஜெபிக்க வேண்டுமா? இவைகளெல்லாம் ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவோடு உங்களுக்குள்ள உறவைப் பொறுத்தது.

### புதிய உடன்படிக்கையின் அடிப்படை

“அவன் எனக்குப் பிரியமானவன்” என்று அவர் சொல்ல வேண்டும். “ஆண்டவரே, உம்முடைய முக அசைவு ஒவ்வொரு கணத்திலும் என்னில் பிரியமாயிருக்கவேண்டும் என்பது என் ஆசை,” என்று நாம் சொல்ல வேண்டும். “அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்” (எபே. 4:30); “ஆவியை அவித்துப் போடாதிருங்கள்”. “Do not quench the spirit”, “Do not grieve the spirit”. grieve என்றால் hurt பண்ணு வது என்று அர்த்தம். பரிசுத்த ஆவியை நாம் எப்படிப் பின்பற்ற வேண்டும்? அவர் மின்னலைப்

போல தலையிலே வந்திறங்குவாரா? *-27°C தண்ணீரைப்போல குளிர்ச்சியாக முதுகுத்தண்டுவழியாக* இறங்குவாரா? அந்நிய பாஷையிலே பேசும்போது பரிசுத்த ஆவியானவர் நிரப்புவாரா? *கர்த்தராகிய இயேசுவே, கர்த்தராாகிய இயேசுவே* என்று சொல்லும்போது பரிசுத்த ஆவியானவர் நிரப்புவாரா? *ஸ்தோத்திரம் ஆண்டவரே, ஸ்தோத்திரம் ஆண்டவரே, ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்* என்று நாக்கு வறண்டுபோகும்வரை ஸ்தோத்திரம் சொன்னபிறகு பரிசுத்த ஆவியானவர் நிரப்புவாரா? That is demeaning the Holy Spirit.

பரிசுத்த ஆவியானவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்துகிற ஒரு நபர். அவரைப் புண்படுத்தாதிருங்கள். ஸ்தோத்திரம் பண்ணவில்லை என்பதால் அவர் புண்பட்டுபோவதில்லை. *கர்த்தராகிய இயேசுவே* என்று சொல்லாததால் அவர் புண்பட்டுப் போவதில்லை. ஆனால் நம் வாழ்க்கை, சொற்கள், எண்ணங்கள், மனப்பாங்குகள், செயல்கள் எல்லாவற்றையும்குறித்து அவர் புண்படுகிற வாய்ப்பு உண்டு. ஆகவே, தேவனுடைய மக்கள் எந்த அளவுகோலின்படி நடக்க வேண்டும் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் புண்படுகிறாரா காயப்படுகிறாரா இல்லையா எனற அளவுகோலைத்தவிர வேறொன்றுமில்லை. பரிசுத்த ஆவியானவர் புண்படுகிறார், காயப்படுகிறார், துக்கப்படுகிறார் என்பது தெரிய வருமா, வராதா? பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியிலே வாசம்செய்வதால் அவர் புண்படும்போது, காயப்படும்போது, துக்கப்படும்போது அந்தப் புண், காயம், துக்கம் நமக்குக் கேட்கும். இது புதிய ஏற்பாட்டிலே தேவனுடைய மக்களுடைய சிலாக்கியம். புது உடன்படிக்கையின் அடிப்படையானது. Do not quench the spirit. பரிசுத்த ஆவியானவர் நெருப்பைப்போல என்று கற்பனை பண்ணிக்கொள்வோம். நெருப்புமீது கோணிப்பையைப் போட்டால் நெருப்பு அணைந்துவிடும். அதுபோல, தொடர்ந்து ஒருவர் நம்மோடு உறவுகொண்டிருக்கும்போது அந்த உறவிலே நாம் அவரை அணைத்துப்போட முடியுமா? தாராளமாக முடியும். நம்முடைய மனப்பாங்கின் மூலமாக இதைச் செய்ய முடியும். அந்த நபர் என்ன சொன்னாலும், என்ன பேசினாலும், "உனக்கு ஒன்றும் தெரியாது; சும்மாயிரு" என்று பத்து தடவை சொன்னால் நான் அந்த நபரை we have completely silenced the person. "நீ சொல்வதெல்லாம் இந்த நாட்களிலே ஒத்துவராது. அது இந்தியாவில் வேலை செய்யும். அமெரிக்காவில் வேலை செய்யாது. 19ஆம் நூற்றாண்டிலே மிஷனெரிமார்கள் செய்ய முடிந்தது. 21ஆம் நூற்றாண்டிலே செய்ய முடியாது," என்று குறுக்கிட்டு பேசினால் he will be quenched.

## 2. உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை

நம் சாட்சி வீரியமுள்ளதும், உயிர்த்துடிப்புள்ளதுமாக இருக்க வேண்டும் என்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள நம் தனிப்பட்ட உறவை நாம் பராமரித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த உலகம் மிக இருளான உலகம். இந்த உலகம் *"மாறுபாடுள்ள சந்ததி" (அப். 2:40)* என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்கிறார் *(அப். 2:40). "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு" (பிலி. 2:14, 15)* என்று பவுல் கூறுகிறார். *"சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்".* இந்த சந்ததி என்பது இந்தத் தலைமுறை, யுகம் அல்லது காலம். இது *"கோணலும் மாறுபாடுமுள்ள தலைமுறை".* வேதம் நம்மைக் *"குற்றமற்றவர்கள், கபடற்றவர்கள், தேவனுடைய மாசில்லாத பிள்ளைகள்"* என்று அழைக்கிறது.

உலகத்தில் இன்றைக்குத்தான் பாவங்கள் அதிகரித்துவிட்டன என்று நினைக்க வேண்டாம். பாவத்துக்கு எதிராகப் பேசுபவர்கள் இன்று சில நாடுகளில் கைதுசெய்யப்படுகிறார்கள். என்றைக்கு ரோமப் பேரரசு ஆதிக்கம் செலுத்தினதோ அன்றுமுதல் இந்தப் பாவங்களெல்லாம் மலிந்துதான் கிடக்கின்றன. இதெல்லாம் தேவனுடைய மக்களுக்குத் தெரியாதது இல்லை. ஆனால், அது எவ்வளவு இருளான, கோணலான, மாறுபாடுள்ள சந்ததியும், தலைமுறையும், காலமும், யுகமுமாக இருந்தபோதும்கூட தேவனுடைய மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்கிற மாபெரும் சுடருக்கு, அவரைப் பிரதிபலிக்கிற சிறிய சுடர்களாக நாம் இந்தப் பூமியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால், நம் நம்பிக்கையைக்குறித்து நம்மிடத்தில் விசாரித்துக் கேட்கிற எவர்களுக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் நாம் பதில் சொல்ல, மாறுத்தரம் சொல்ல ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

## தானியேலும், அவனுடைய மூன்று நண்பர்களும்

ஒரேவொரு எடுத்துக்காட்டாக தானியேலைப்பற்றிச் சொல்கிறேன். தானியேல் வாழ்ந்த காலத்தைவிட நாம் வாழ்கின்ற காலம் அதிகமாய்ச் சீரழிந்ததோ, கோணலும், மாறுபாடும் அதிகமாய் நிறைந்ததோ

அல்ல. தானியேலும் அவனுடைய சில நண்பர்களும் கல்தேயருடைய தேசமாகிய பாபிலோனுக்குச் சிறைபட்டுப் போனார்கள். சிறைப்பட்டுப் போனபிறகு அந்த இஸ்ரயேல் புத்திரரிலே மிகவும் திறமை படைத்த, அறிவுள்ள, ஞானமுள்ள சிலரை நேபுகாத்நேச்சார் தெரிந்தெடுத்து அவர்களுக்கு பாபி லோனியக் கல்வியைக் கொடுக்குமாறு என்று ஓர் ஆளுநரிடம் சொல்கிறான். முதல்வேலையாக அந்த ஆளுநர் அவர்களுடைய பெயரை மாற்றுகிறான். அவர்களுடைய எபிரேய பெயர்களுக்குப் பதிலாக கல்தேயருடைய கடவுளுடைய பெயர்களை வைத்தான். என்னைப் பிடித்துக்கொண்டுபோய் எனக்கு வேறொரு கடவுளின் பெயரை வைப்பது போன்றது. அப்படியென்றால் என் மேலாளர் என்னை அந்தப் பெயரால்தான் கூப்பிடுவார். “இந்த நாட்டிலே அதுதான் உன் பெயர்,” என்பான். நீங்கள் இதை கற்பனைசெய்து பார்க்க வேண்டும். அனனியா, மீஷாவேல், அசரியா என்ற அவர் களுடைய பெயர்களை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று மாற்றினான். இந்தப் பெயர்களை உச்சரிக்காமல் இருப்பது நல்லது. தானியேலுடைய மூன்று நண்பர்களுடைய உண்மையான பெயர் தெரிந்த கிறிஸ்தவர்கள் குறைவு. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பெயர்கள் ஞாபகம் இருக்கும். ஆனால் அவர்களுடைய எபிரேய பெயர்கள் நமக்கு ஞாபகம் இல்லை.

அவர்களுடைய உயர் அதிகாரி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட ராஜ உணவை அந்த வாலி பர்களுக்கு நியமிக்கிறான். ஆனால், “நாங்கள் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தங்களைத் தீட்டுப்படுத்தலாகாது என்று தங்கள் இருதயத்தில் தீர்மானித்துக் கொண்டார்கள்”. யோசித்துப் பார்க்க வேண்டும். “இந்த உணவினால் என்னைத் தீட்டுப்படுத்திக் கொள்வதில்லை,” என்று அவன் சொல்கிறான், தீர்மானிக்கிறான். ஒரு மனிதன் காலூன்றி நிற்கும் போது அவனோடுகூட சேர்ந்து நிற்க மூன்று பேர் வருவார்கள். அவன் மேலதிகாரியை அணுகிப் பேசுகிறான். “பத்து நாள்வரைக்கும் எங்களைச் சோதித்துப்பாரும். எங்களுக்குப் புசிக்க பருப்பு முத லான மரக்கறிகளையும், தண்ணீரையும் கொடுத்து எங்கள் முகங்களையும், ராஜபோஜனத்தில் புசிக் கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும். பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும்,” என்று விண்ணப்பிக்கிறான். “நான் அப்படிக் கொடுத்தால் உனக்கு வரவேண்டிய ரேஷன் எல்லாவற்றையும் நான் கொள்ளையடித்துவிட்டேன் என்று இராஜாவுக்குத் தெரிய வரும்,” என்று அதிகாரி சொல்கிறான். நல்ல இராஜ உணவு, திராட்சை ரசம், கறி, மீன், முட்டை சாப்பிடுகிறவர் களுக்கும், பருப்பு காய்கறி சாப்பிடுகிறவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவர்கள் முகத்தையும், உடம்பையும் பார்த்தாலே தெரிய வந்துவிடும். தானியேல், “நீர் பத்து நாளைக்குக் கொடுத்துப் பாரும்,” என்று சொல்கிறான். “இராஜ போஜனம் சாப்பிடுகிற அந்த வாலிபருடைய முகக் களை யோடு எங்கள் முகக்களையை நீர் ஒப்பிட்டுப் பாரும். உமக்குத் திருப்தியாயிருந்தால் தொடர்ந்து தண்ணீர், பருப்பு, காய்கறிகள் சாப்பிட அனுமதி கொடுத்துவிடும்”. பத்து நாள் அந்த பரீட்சைக்கு அந்த மேலதிகாரி ஒத்துக்கொள்கிறான். பத்து நாள் கழித்து அவர்களைப் பார்க்கும்போது ராஜ போஜனம் சாப்பிட்ட மற்ற எல்லா வாலிபர்களைவிட தண்ணீர், பருப்பு, காய்கறிகள் சாப்பிட்ட வாலி பர்களுடைய முகம் மிகவும் களையாக இருந்தது. இதன் ஆவிக்குரிய பொருள் “அசைவத்தைவிட சைவம் உயர்ந்தது” என்று வேதம் சொல்கிறதா? அதுவல்ல காரியம். “மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்”.

ஒருவேளை இந்த இருளும் கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததியிலே போதுமான ஆதரவு இல்லா மல் இருக்கலாம். நம் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கலாம். நம்மோடு உடன்படுபவர்கள் மிகக் குறைவாக இருக்கலாம். நம்மோடு சேருகின்றவர்கள் குறைவாக இருக்கலாம். “இவர்கள் வாழ்கின்ற வாழ்க்கைதான் மேன்மையான வாழ்க்கை” என்று சான்று பகர்கிறவர்கள் மிகக் குறை வாக இருக்கலாம். 1 கொரிந்தியர் 1ஆம் அதிகாரத்தில் வாசிப்பதுபோல “இந்த உலகத்திலே நாம் ஞானமில்லாதவர்களும், பலவீனர்களும், இழிவாய்க் கருதப்படுகிற மக்களாகவும் காட்சியளிக்கலாம்”. ஆனால், உலகம் அறியாத ஒரு வளம், ஒரு செழிப்பு, தேவனுடைய மக்களுக்கு உண்டு. நாம் இந்த உலகத்தைச் சார்ந்தவர்களல்ல. ஐயோ! இந்த உலகத்ததைச் சார்ந்து, இந்த உலகத்தோடு ஒட்டி யொழுகாவிட்டால் எப்படி இந்த உலகத்திலே நாம் வாழ முடியும்! தானியேல் மட்டுமல்ல; தேவ னுடைய மக்கள் எல்லா யுகங்களிலும், எல்லா நூற்றாண்டுகளிலும், நமக்கு சாட்சி பகர்கிறார்கள். நாம் இந்த உலகத்தைச் சார்ந்தவர்களல்ல. இந்த உலகத்தின் வழிகளோடு நாம் ஒட்டியொழுக மாட்டோம். நான் கழுத்தில் சிலுவை போட்டுக்கொள்வதைப்பற்றியோ, ‘இயேசு இரட்சிக்கிறார்‘ என்ற அடையாளச் சின்னத்தை வரைந்துகொள்வதைப்பற்றியோ பேசவில்லை. இதுவல்ல இந்த உலகத் தோடு ஒட்டியொழுக மாட்டோம் என்று சொல்வது. நம் வாழ்க்கைமுறையிலே இந்த உலகத்து மக்கள் ஒரு குறிப்பிட்டமுறையில் வாழ்ந்தால்தான் மகிழ்ச்சியான வாழ்க்கை, மேன்மையான வாழ்க்கை என்று சொல்வதோடு நாம் ஒருநாளும் ஒத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. “ஓ! தேவனுடைய மக்கள், கிறிஸ்தவர்கள் என்று சொல்கிறவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுதான்

மகிழ்ச்சியும், சமாதானமும், மேன்மையானதுமான வாழ்க்கை!" என்பதை அவர்கள் நம்மிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த உலகத்திலிருந்து வல்லமையை அல்லது ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சபை நினைக்கும்போது அன்றைக்கு சபை தன் வல்லமையை இழந்துபோகிறது, அன்றைக்கு சபை இந்த உலகத்திற்கு சாட்சிபகர முடியாது.

முதலாவது, தேவனுடைய மக்கள் உண்மையிலேயே உயிர்த்துடிப்புள்ள, வீரியமுள்ள சாட்சியாக இருக்கவேண்டுமென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவை பராமரித்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட உறவு என்பதை தானியேலுடைய வாழ்க்கையிலிருந்து நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி தானியேல் 6ஆம் அதிகாரத்தில் உள்ளது. முப்பது நாட்களுக்கு அரசனைத்தவிர தேவனிடத்திலாவது வேறு யாரிடத்திலாவது எந்தக் காரியத்தைக்குறித்தும் மக்கள் முறையிடக்கூடாது, விண்ணப்பம்பண்ணக்கூடாது என்று தெரிந்தபிறகும்கூட தானியேல் தன் வீட்டின் ஜன்னலை திறந்து வைத்து, எருசலேம் நோக்கி எப்பொழுதும் ஜெபிக்கிறதுபோல அப்பொழுதும் காலை, மதியம், மாலை என்று மூன்றுமுறை அவன் தேவனை நோக்கி ஜெபித்தான். "கட்டளையா போட்டிருக்கிறாய்! நான் எவ்வளவு புரட்சிகரமானவன் என்று ஜெபித்து நிருபிக்கிறேன் பார். முன்பெல்லாம் கதவை மூடிவிட்டு ஜெபிப்பேன். இப்போது கட்டளை கொடுத்தபிறகு கதவைத் திறந்து வைத்து ஜெபிக்கிறேன்," என்று அவன் ஜெபிக்கவில்லை. அவன் எப்போதுமே கதவைத் திறந்து வைத்து எருசலேமை நோக்கி முழங்கால்படியிட்டு ஜெபிக்கும் பழக்கமுள்ளவன். தன் பழக்கத்தை அவன் மாற்றிக்கொள்ளவில்லை.

ஆகவே, தேவனோடுள்ள தனிப்பட்ட உறவிலே எல்லாக் காரியங்களுக்காகவும் தேவனிடத்தில் சென்று ஜெபிப்பது அடங்கும். நெருக்கடி என்று ஒன்று வந்தபிறகு ஜெபிப்பது அல்ல. நம்முடைய வாழ்க்கையின் எல்லா நிலையிலும், சூழலிலும், தேவையிலும், நெருக்கத்திலும், குறைச்சலிலும், தீர்மானங்களிலும் தேவனிடத்தில் ஜெபிப்பது.

### வேதத்தை ஆராய்தல்

தேவனுடைய மக்களைப்பற்றிய அறிவை அவன் எப்படிப் பெற்றுக்கொண்டான்? எரேமியாவின் புத்தகத்திலே வாசித்து எழுபது ஆண்டுகள் கழித்து தேவன் தம்முடைய மக்களுடைய சிறையிருப்பை மாற்றுவார் என்று அவன் புரிந்துகொள்கிறான். எழுபது ஆண்டுகள் ஆகப் போகிறது. எனவே, தேவன் தம் மக்களைச் சிறைதிருப்பி சொந்த நாட்டிற்குக் கொண்டுபோக வேண்டும் என்று ஜெபிக்க ஆரம்பிக்கிறான். தேவனுடைய வார்த்தையை ஊன்றிப் படிக்கிறவன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவிலே தேவனுடைய மக்களுக்கான தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிய அவன் போய் ஒரு தீர்க்கதரிசியைச் சந்தித்து அறிந்துகொள்ளவில்லை. தேவனுடைய வசனத்தை அவன் ஊன்றிக் கவனித்து, ஆராய்ந்து படித்து அவருடைய சித்தத்தை அறிந்து கொள்கிறான். "பாபிலோனில் எழுபது வருடம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்திலிருந்து திரும்பிவரப்பண்ணுவேன்" *(எரே. 29:10)* என்று எரேமியா புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்கிறான்.

பெரும்பாலான நம் வாழ்க்கைக்குரிய தீர்மானங்களையும், முடிவுகளையும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் எடுக்க முடியும். தேவனுடைய வார்த்தை தெரியாவிட்டால் நீங்கள் தீர்க்கதரிசியைச் சந்திக்க வேண்டியிருக்கும். தீர்க்கதரிசிக்கு ஆவிக்குரிய ஆலோசகர் என்று பொருள். ஆவிக்குரிய ஆலோசகர்கள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தைக்கு அவர்கள் மாற்றாக முடியாது.

### 3. நாம் உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டவர்கள்

இரண்டாவது, நாம் இந்த உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டவர்கள். ஆகவே, "இந்த உலகத்தின் ஆதரவு, உலகத்து மக்களுக்குரிய வளங்கள், இல்லாமல் போய்விடுமோ!" என்று நாம் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் அறியாத அல்லது அறிந்ததைவிட பலமடங்கு மேலான வளங்களைத் தேவன் தம் மக்களுக்கு வைத்திருக்கிறார். இந்த நாட்டிலே எல்லாரும் நீண்ட கால் சட்டையும், மேல்சட்டையும் போட்டிருக்கிறார்களென்றால், ஒரு விசுவாசி கல்லூரிக்குப் போகும்போது ஜிப்பா போட்டுக்கொண்டு, தன்னை ஆவிக்குரிய ஆள் என்று காட்சி காட்டக்கூடாது. அந்தந்த நாட்டிலே கண்ணியமான உடை என்று எது கருதப்படுகிறதோ அதை நாம் அணிய வேண்டும்.

### 4. தேவனுடைய மக்களோடுள்ள தோழமை

மூன்றாவது, தேவனுடைய மக்களோடுள்ள தோழமை. நாம் தனியாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சி பகர்வதாக நினைக்கக் கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவுக்கு

வரும்போது கொரிந்து பட்டணத்தைப் பார்த்தவுடன் நம்பிக்கையை இழந்துவிட்டான். முதல் நூற்றாண்டிலே இருந்த கொரிந்துக்கு 21ஆம் நூற்றாண்டிலே இந்த உலகத்திலே எந்த நகரம் சமமானது என்று தெரியுமா? அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்செலஸ் என்று சொல்கிறார்கள். அதைப் பார்த்தவுடன் பவுலுக்கு நம்பிக்கை போய்விட்டது. "இங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்க வேண்டிய அவசியமேயில்லை," என்று நினைத்தான். அடுத்த நகரத்துக்குப் போய்விடலாம் என்று நினைத்தான். ஆனால், ஆண்டவர் அவனுக்குக் கனவிலே தோன்றி, "நீ பயப்படாமல் பேசு; மவுனமாயிராதே... இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக மக்கள் உண்டு," (அப். 18:9-11) என்று சொல்கிறார். "ஆண்டவரே இந்தப் பட்டணத்திலா? காலையிலிருந்து சாயங்காலம்வரை ஆண் பெண் வித்தியாசம் தெரியாத அளவுக்கு மதுக்கடையில் இருக்கிறார்கள். ஆண்கள் போடுகிற உடைக்கும் பெண்கள் போடுகிற உடைக்கும் வித்தியாசமே தெரியவில்லை," என்று சொல்வதுபோல் இருக்கிறது. கொரிந்துவிலே அப்படி ஆடை அணிந்திருந்தார்கள். கொரிந்துவிலே உடையைப் பார்த்து ஆண் என்றும் பெண் என்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் இரட்சிக்கப்பட்டபிறகு சபையிலே வித்தியாசம் தெரிவதற்காக பெண்கள் தங்கள் தலையை முக்காடிட வேண்டும் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார். கொரிந்துவிலே நற்செய்திக்கு இடம் கிடையாது என்று அவர் சொல்கிறார். ஆனால், "இந்தப் பட்டணத்திலும் அநேகர் உண்டு. நீ பயப்படாமல் பேசு," என்று ஆண்டவர் சொல்கிறார். மதுக்கடையில் உட்கார்ந்துவிட்டு வெளியே வருபவனிடம் எப்படி பயப்படாமல் பேச முடியும்? நாம் எந்த நாட்டிலே, காலத்திலே வாழ்ந்தாலும் தேவனைத் தேடுகிற மக்கள் உண்டு. நாம் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். கொரிந்துவில், லாஸ் ஏஞ்செலஸில் உண்டு. இந்தியாவிலும் உண்டு. நாம் ஒருவேளை உத்தர்காண்ட போனால் அங்கேயும் தேவனுடைய மக்கள் உண்டு. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தேவனுடைய மக்கள் இருப்பார்கள் என்று சொல்லவில்லை. ஆனால் நிச்சயமாக தேவனைத் தேடுகிறவர்கள் உண்டு.

எலியா, "உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்," என்று சொல்கிறான். "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும் அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்," என்று ஆண்டவர் சொல்கிறார். எல்லாக் காலத்திலும் உண்டு.

உங்களுக்கு நான் ஆலோசனையாகச் சொல்கிறேன். தேவன் உங்களை எந்த ஊருக்குக் கொண்டு போனாலும் அங்கு தேவனுடைய மக்கள் இருப்பார்கள். தேவனுடைய மக்கள் என்ற நாமத்தை சூட்டியிருக்கிற எல்லாரும் உத்தம இருதயமுள்ளவர்கள் என்று நான் சொல்லவில்லை. "ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்துக்கும் சில கனவீனத்துக்குமானவைகள்" (2 தீமோ. 2:20). இந்த வசனங்களை ஜெபத்தோடு வீட்டிலே வாசித்துப் பாருங்கள். இங்கு வீடு என்பது தேவனுடைய வீட்டைக் குறிக்கிறது. தேவனுடைய வீட்டிலே தொன்றுதொட்டு இப்படிப்பட்ட பாத்திரங்களுண்டு. எல்லாரும் பொன், வெள்ளியான பாத்திரங்களல்ல. மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு. ரோமன் கத்தோலிக்க மத அமைப்பிலே தேவனுடைய மக்கள் உண்டா? உண்டு. அவர்களைவிட உயர்ந்த புரொட்டஸ்டான்ட் மார்க்கத்திலே தேவனுடைய மக்கள் உண்டா? உண்டு. அவர்களைவிட மிக மிக உயர்ந்த பெந்தெகொஸ்தே சகோதரர்களிடையே தேவனுடைய மக்கள் உண்டா? உண்டு. "அவர்களெல்லாம் மரம், மண். நாமெல்லாம் பொன், வெள்ளி" என்று நான் சொல்லவில்லை. எப்படிப்பட்ட கூடுகையிலே, சமுதாயத்திலே அவர்கள் வாழ்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல. பெரும்பாலும் அவர்கள் வாழ்கின்ற சமுதாயம் அவர்கள் தரத்தைப் பாதிக்கும். எனவே, நாம் எப்படிப்பட்ட சமுதாயத்தைத் தெரிந்துகொள்கிறோமோ அந்த சமுதாயத்தால் நம் குணமும், கட்டமைப்பும், பழக்க வழக்கங்களும் நாம் எந்த தளத்தில் சிந்திக்கிறோம் என்பது பாதிக்கப்படும். "ஒருவன் தன்னை சுத்திகரித்துக்கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாக இருப்பான்" என்று சொல்கிறார். தேவனுடைய மக்கள் எல்லாக் காலங்களிலும், எல்லா ஊர்களிலும் உண்டு. ஒருவேளை அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். ஆனால், சிலர் தங்களைச் சுத்திகரிக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள தங்கள் உறவில நூற்றுக்கு நூறு சதவிகிதம் உத்தம இருதயமுள்ளவர்களாய் இருந்தார்கள். நாமும் அப்படிப்பட்ட மக்களாக இருக்க வேண்டும். "நீயோ பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு". நாம் விசுவாசத்தையும், அன்பையும், நீதியையும், சமாதானத்தையும் அடையும்படி நாட வேண்டும்.

ஆனால், நாடும்போது தீமோத்தேயுவினுடைய ஒரு வாக்கு, "நீ மட்டுமல்ல; சுத்த இருதயத்தோடு தேவனைத் தேடுகிற மக்கள் நீ வாழ்கின்ற காலத்திலே, இடத்திலே உண்டு". அவர்களை அடையாளங்கண்டுகொள்வதற்கு நாம் முயற்சிசெய்ய வேண்டும். "நான் இந்த இடத்திலே இருந்து கொள்வேன். அவர்கள் என்னை அடையாளங்கண்டுகொள்ளட்டும்" என்று சொல்லக்கூடாது. நாம் பெரிய அப்போஸ்தலர்கள் கிடையாது என்று சொல்லலாம். நாம் சிறிய மக்களாக இருக்கலாம். ஒருசில மக்களை அவர் அடையாளங்காண முயற்சி செய்கிறார். ஆனாலும் அவர்களை இவர் சுத்த இருதயமுள்ளவர்கள் என்று சொல்ல முடியவில்லை.

ஒரு மனிதனை அடையாளங்கண்டுகொள்ள மிகச் சிறந்த வழி அவனுடைய குடும்பம். அவனுடைய மனைவியினுடைய ஆவிக்குரிய நிலை என்ன? தன் வீட்டைத் திறந்துகொடுத்து, பரிசுத்தவான்களை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவுகிறார்களா? அவர்கள் பிள்ளைகளுடைய நிலைமை என்ன? அவர்கள் பிள்ளைகள் ஆண்டவராகிய இயேசுவுக்கு பிரகாசிக்கிற சாட்சிகளாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. குறைந்த பட்சம் பரிசுத்தவான்கள் வீட்டுக்கு வரும்போது முகத்தைத் தூக்காத பிள்ளைகளாக இருந்தாலேயே போதும்.

தூய, உத்தம இருதயத்தோடு கர்த்தரை தேடுகிற சகோதரனென்றால், போய் அவருடைய குடும்பத்தைப் பார். தேவனுடைய பிரசன்னத்தை உணர்கிறாயா? அவர்கள் பரிசுத்தவான்களை உபசரிக்கிறார்களா? "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்" என்று எபிரெயர் 13ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பரிசுத்தவான்களை உபசரித்து அவர்களுடைய கால்களைக் கழுவி, கழுவி என்றால் வருகின்றவர்களை ஆற்றித் தேற்றி தண்ணீர் கொடுத்து அவர்களுக்குக் கொஞ்சம் வசதி செய்து கொடுங்கள் என்று தீமோத்தேயுக்கு எழுதும்போது 1 தீமோத்தோயுவிலே பவுல் சொல்கிறார்.

நான் பகிர்ந்து கொண்டது என்னவென்றால் எல்லாக் காலங்களிலும், நாடுகளிலும் தேவனுடைய மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உயிர்த்துடிப்புள்ள, வீரியமுள்ள சாட்சியாக வாழ முடியும். இந்த உலகத்தின் ஆதரவு அல்லது பக்கபலம் இல்லாமல் இருக்கலாம். இதற்கு மூன்று காரியங்களை நாம் கவனமாய்ப் பராமரிக்க வேண்டும். ஒன்று, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவு. அதுதான் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் அளவுகோல். இரண்டாவது, நாம் இந்த உலகத்தைவிட்டு வேறுபிரிக்கப்பட்டவர்கள். அதனால் அஞ்ச வேண்டாம். இந்த உலகத்திற்கு இல்லாத வளமும், பலமும் தேவன் தம்முடைய மக்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார். நாம் இந்த உலகத்திற்கு சாட்சியாக வாழ வேண்டும். வெறும் தண்ணீரும், பருப்பும்தான் நமக்கு கிடைத்தது என்றால்கூட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக இந்த உலகிற்குச் சொல்ல முடியும். "அவர்களுக்குத் தானியமும், திராட்சைரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிகமான சந்தோஷத்தை என் இருதயத்திலே கட்டளையிட்டீர்" என்று நான் அடிக்கடி சொல்வது உண்டு. தானியேலுடைய, தாவீதுடைய சாட்சி அது. எல்லா நூற்றாண்டுகளிலும் தேவனுடைய மக்களுடைய சாட்சி அது. மூன்றாவது, தனிப்பட்ட விதத்தில் அல்ல. எல்லா நாடுகளிலும், காலங்களிலும், இடங்களிலும் அது எப்பேர்பட்ட சீரழிந்த இடமாக இருந்தாலும் சரி சுத்த இருதயத்தோடு தேவனைத் தேடுகிற ஒருசில மக்களாவது உண்டு. அவர்களை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். நாம் தேட முயற்சி செய்யும்போது தேவன் அவர்களை நம்மோடு கூட்டியிணைப்பார். இதை நாம் செய்வோமென்றால் எவ்வளவு இருளான, கோணலான, மாறுபாடுகள் நிறைந்த தலைமுறையாக இருந்தாலும் சரி நம்மூலமாய் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மகிமைப் படுவார். ஆமென்.